**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in


பெறுநர், தேதி: **06.06.2025**
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

### தொழில்நுட்ப வணிக காப்பகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மத்திய அரசின் வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சகத்தின் - RKVY-RAFTAAR-R-ABI மானியம் வழங்கும் விழா

மத்திய அரசின் வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சகத்தின் Rashtriya Krishi Vikas Yojana - Remunerative Approaches for Agriculture and Allied sectors Rejuvenation – Regional Agribusiness Incubators (RKVY-RAFTAAR-R-ABI) எனும் திட்டம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், தொழில்நுட்ப வணிக காப்பகத்தில் 2019-ல் இருந்து செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் இரண்டு பிரிவுகள் மூலம் மானியம் வழங்கப்படுகின்றது.

(i) புதிய வேளாண் தொழில் முனைவோர்களுக்கான (AOP) ரூ. 5 இலட்சம் வரையிலான மானியத் தொகை
(ii) வேளாண் துளிர் நிறுவனங்களுக்கான (SAIP) ரூ.25 இலட்சம் வரையிலான மானியத் தொகை

மத்திய அரசின் வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சகத்தின் MoA & FW- RKVY - திட்டத்தின் கீழ் 2019 முதல் ரூபாய் 8.98 கோடி மானியம் தொழில்நுட்ப வணிக காப்பகத்தின் 85 தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சகத்தின் (RKVY-RAFTAAR-R-ABI) கீழ் தேர்ந்தெடுக்கபட்ட புத்தொழில் முனைவோர்கள் மற்றும் உரிமையாளர்களுக்கு 06.06.2025 அன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மதிப்பிற்குரிய பொறுப்பு துணைவேந்தர் பேராசிரியர் முனைவர்.R.தமிழ்வேந்தன் அவர்கள் மானியங்களை வழங்கினார். 10 வேளாண் துளிர் நிறுவனங்களுக்கான SAIP Cohort – III மானியம் ரூ.35 இலட்சம் மூன்றாம் தவணையாக, 11 தொழில் முனைவோர்களுக்கான AOP Cohort IV மானியம் ரூ.17.80 இலட்சம் இரண்டாம் தவணையாக மற்றும் 13 தொழில்

*முனைவோர்களுக்கான* AOP Cohort V *மானியம் ரூ.**34.50** இலட்சம் முதல் தவணையாக மொத்தம்* ***34*** SAIP Cohort – III, AOP Cohort IV *மற்றும்* AOP Cohort V *மானியதாரர்களுக்கு ரூ.* ***88.20*** *இலட்சம் வழங்கினார்.*

*மதிப்பிற்குரிய பொறுப்பு துணைவேந்தர் பேராசிரியர் முனைவர்.R.தமிழ்வேந்தன் அவர்கள் தனது உரையில் இளம் பட்டதாரிகளை வேளாண்மை சார்ந்த தொழிலில் ஈடுபடுத்துவதன் முக்கியத்துவம் மற்றும் நிலையான மற்றும் இலாபகரமான விவசாய வணிகத்திற்காக புதிய தொழில்நுட்பங்களை புதுமைப்படுத்தவும் செயல்படுத்தவும், விவசாயம் சார்ந்த தொழில் முனைவோர்களை வழிகாட்டும் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தினார்.*

*இந்நிகழ்ச்சியில் முனைவர்.E.சோமசுந்தரம், இயக்குநர், வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககம் அவர்கள் வரவேற்புரையாற்றினார் மற்றும் திரு.A.V.ஞானசம்பந்தம், நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி, தொழில் நுட்ப வணிக காப்பகம் நன்றியுரை வழங்கினார். மேலும் இவ்விழாவில் திருமதி. J. கிருஷ்ணவேணி, வேளாண் இணை இயக்குனர், கோவை, பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர். இத் திட்டத்தின் கீழ் மானியம் பெற்ற தொழில் முனைவோர்கள் தங்கள் மானியத்தை வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த தயாரிப்பு பொருட்களை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தி கொள்வர்.*

**மக்கள் தொடர்பு அலுவலர்**